தனது தவறுகளிலிருந்து பாடம் கற்க மறந்த தமிழ்நாடு ஆளுநரின் நடவடிக்கை

# அரசமைப்பு சட்டத்தைப் பலவீனமாக்கும் செயல்!

## ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ தலையங்கத்தில் விமர்சனம்!

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி தனது தவறுகளில் இருந்து எவ்விதமான பாடமும் கற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாக தெரிகிறது.இந்த நிலையில் அவருக்கு புதிய பணியை அளிப்பது குறித்து ஒன்றிய அரசு சிந்திக்க வேண்டும் என்று தி இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு தனது தலையங்கத்தில் விமர்சனம் செய்துள்ளது.


The Indian EXPRESS
Founded By
RAMNATH GOENKA
BECAUSE THE TRUTH INVOLVES US ALL
FRAYING THE FABRIC
Clearly, TN Governor R N Ravi doesn't learn from his mistakes. The Centre should think of a new job for him

அமைச்சரவையின் ஒப்புதல் இல்லாமல் ஒரு அமைச்சரை தகுதியிழப்பு செய்வதாக் அறிவித்த நிலையில், அதுபற்றி மத்திய உள்துறை அமைச்சகம், அவரிடம் முதலில் தக்க சட்ட ஆலோசனை பெற வேண்டும் என்று அறிவுறுத்திய பின்னர், சில மணி நேரங்களுக்குள் அதை நிறுத்தி வைக்கும் முடிவை மிகத் தாமதமாக தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி மேற்கொண்டிருக்கிறார்.

கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கும் ஒருவர்மீது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அமைச்சரவையில் அவர் நீடிக்கலாமா என்பது இப்போது பிரச்சினை இல்லை. கடந்த 2015ம் ஆண்டு அவர்மீது போடப்பட்ட வேலை பெற்றுத்தரும் மோசடி வழக்கில் கடந்த ஜூன் 14ம் தேதி அமலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்ட செந்தில் பாலாஜி, முதல்வர் ஸ்டாலின் அமைச்சரவையில் இலாகா இல்லாத அமைச்சராக நீடித்தார்.

ஆனால், இவ்விஷயத்தில் ஆளுநரின் ஒருதலைப்பட்சமான, முன்னெப்போதும் இல்லாத நடவடிக்கை மற்றும் அத்துமீறல் என்பதே கவலைக்கிடமான விஷயமாக உள்ளது. அரசியலமைப்பின் விதிகளும், உணர்வுகளும் பல உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளில் கூறியபடி, ராஜ்பவனின் அதிகாரங்களுக்கு வரம்புகளை வரையறை செய்துள்ளது. ஆனால் அவற்றை கவனத்தில் கொள்ளாமல், ஆளுநர் ரவி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்துடன் மோதல் போக்கை கடைப்பிடித்து வருகிறார்.

1974ம் ஆண்டு ஷம்ஷேர் சிங் மற்றும் பஞ்சாப் மாநில அரசு வழக்கில், உச்ச நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு, ஆளுநர் தனது அதிகாரங்களை “சில அசாதாரண சூழ்நிலைகளைத் தவிர, தேர்ந்தெடுக்கப்பட்டஅமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் மட்டுமே பயன்படுத்த வேண்டும்” என்று கூறியது. இந்த ஆண்டு பிப்ரவரி மாதம், மகாராஷ்டிராவில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி தொடர்பான வழக்கில், அரசியல் விவகாரங்களில் ஆளுநர் நுழைவதற்கு எதிராக உச்ச நீதிமன்றம் தெரிவித்த கண்டனத்தில் “அரசியலமைப்பால் வழங்கப்படாத அதிகாரத்தையோ அல்லது அரசமைப்பின் சட்டத்தையோ அவர் பயன்படுத்த முடியாது” என்று குறிப்பிட்டது.

ஆளுநர் மாளிகைக்கும், ஒரு மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும் இடையே மோதல் ஏற்படுவது புதிதல்ல. இருப்பினும், நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசில், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில்தான் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் வெளிப்படையாகவே பார்வைக்குத் தெரிகிறது. அப்படியே இருந்தாலும் கூட, ஆளுநர் ரவி தனது அரசியலமைப்பு நிலை மற்றும் பங்கு பற்றி கடுமையான தவறான புரிதலை வெளிப்படுத்திய சர்ச்சையில் சிக்கி, மோசமான ஆளுநர்கள் பட்டியலில் தனித்து தென்படுகிறார்.

அமைச்சரது பதவியை நீக்கம் செய்வதை அறிவிக்கும் முன்பே, தமிழ்நாடு அளவில் அதற்கானதவறான காரணங்களை ஆளுநர் ரவி செய்திகளில் கூறியிருந்தார். ஜனவரி மாதம், அவர் தனது உரையின் சில பகுதிகளை படிப்பதை தவிர்த்தார்.அது மரபுப்படி, அரசாங்கம் அளிக்கும் அறிக்கையாகும். அதற்கு முதல்வர் ஆட்சேபம் தெரிவித்த நிலையில்,சட்டசபையை விட்டு வெளியேறிய முதல் ஆளுநராக உள்ளார்.

அதே மாதம் ஒரு பொது நிகழ்ச்சியில் பேசிய அவர், தமிழகம் என்பதே தமிழ்நாடு என்ற பெயருக்கு மிகவும் பொருத்தமான பெயர் என்று குறிப்பிட்டார். இது மாநில பா.ஜ.க.வினர் உட்பட அரசியல் அரங்கில் பலரது கோபத்தை தூண்டியதைத் தொடர்ந்து, அவர் அவசரமாக பின்வாங்க வேண்டியிருந்தது. மொழி வழியிலான துணைதேசிய இயக்கத்திலிருந்து பிறந்த தமிழ் துணைதேசியவாதம் இப்போது இந்தியத் தேசியத்துடனும், கூட்டாட்சி உடன்படிக்கையுடனும் இணக்கமாக உள்ள ஒரு மாநிலத்தில், ஆளுநர் ரவியின் தொனிபல காலமாக கேட்கப்படாமல் புதைந்துள்ள உணர்வுகளுக்கு எதிராக தூண்டும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு ஆளுநராக ஆவதற்கு முன், உளவுத்துறையில் நீண்ட காலம் பணியாற்றிய ரவி, நாகாலாந்து கவர்னராகவும் பணியாற்றினார்.அங்கு, என்.எஸ்.சி.என் ஐ.எம்., அமைப்புடன் அமைதி ஒப்பந்தம் ஏற்படுவதில் முக்கிய பங்காற்றினார். அந்த அனுபவம்அரசமைப்பு சட்டம், அதன் உட்கூறுகள் மற்றும் அவற்றுக்கு இடையில் உள்ள வரையரைகள் பற்றிய ஆழமான உணர்வை அது அவருக்கு அளித்திருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை. அதனால், ஆளுநர், தனது தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள மறுக்கிறார் என்பது தெளிவாகிறது. மத்திய மற்று மாநில அரசுகளியே நிலவும் கூட்டாட்சி கட்டமைப்பை மேலும் சிதைத்து, தவறான முன்னுதாரணங்களை உருவாக்கும் அவர் பதவியில் நீடிப்பதை ஒன்றிய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு தி இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு தெரிவித்துள்ளது.

# அதிகார வரம்பை மீறி விட்டார் ஆளுநர் ஆர்.என்.ரவி!

## சட்ட நிபுணர்கள் கருத்து!

புதுடெல்லி, ஜூலை 2-

முதல்வர் ஆலோசனை இல்லாமல் அமைச்சர் பதவி நீக்கம் செய்யும் விவகாரத்தில் கவர்னர் ஆர்.என் ரவி அதிகார வரம்பை மீறிவிட்டார் என்று சட்ட நிபுணர்கள் தெரிவித்தனர்.

தமிழ்நாடு அமைச்சர் செந்தில்பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க கவர்னர் ஆர்.என் ரவி உத்தரவிட்டார். ஆனால் 5 மணி நேரத்தில் அந்த உத்தரவை நிறுத்தி வைத்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரை இல்லாமல் கவர்னர் ஆர்.என்.ரவி எடுத்த இந்த நடவடிக்கை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக சட்ட நிபுணர்கள் கூறியதாவது:

**முன்னாள் அட்டர்னி ஜெனரல் முகுல் ரோத்தகி:**

ஒருதலைபட்சமாக ஒரு அமைச்சரை பதவி நீக்கம் செய்வதில், ஆளுநருக்கு எந்த வேலையும் இல்லை. அவர் தனது அதிகார வரம்பை மீறிவிட்டார். அமைச்சர வையில் யார் இருக்க வேண்டும், யார் அமைச்சரவையில் இருக்கக்கூடாது என்பதை அவர் எப்படி முடிவு செய்வார்? அமைச்சரவை உதவி மற்றும் ஆலோசனையின்படிதான் கவர்னர் செயல்பட வேண்டும்.

**மூத்த வழக்கறிஞர் அஜித் சின்ஹா:**

ஆளுநர் ஒருதலைப்பட்சமாக செயல்பட்டு ஒரு அமைச்சரை பதவி நீக்கம் செய்வது நல்லதல்ல. அமைச்சர் பதவி நீக்க விவகாரத்தில் முதல்வரின் பரிந்துரை இல்லாமல் கவர்னரால் ஒருதலைப்பட்சமாக செயல்பட முடியாது. அமைச்சரை நீக்கும் சுதந்திரமான அதிகாரம் அவருக்கு இல்லை. இல்லையேல் ஒட்டுமொத்த கூட்டாட்சி அமைப்பும் வீழ்ச்சியடையும், ஏனெனில் ஆளுநருக்கு இந்த அதிகாரம் இருந்தால் நாளை ஒட்டுமொத்த அரசையும் டிஸ்மிஸ் செய்வார்.

இவ்வாறு சட்ட நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தும்

# தமிழ்நாடு ஆளுநரின் செயல் தவறான முன்னுதாரணம்!

## ‘தி இந்துஸ்தான் டைம்ஸ்’ நாளேடு கருத்து

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவியின் அரசமைப்பு விதிகளுக்கு எதிராக வரம்பு மீறும் நிலைப்பாட்டை அடியொற்றி, வேறு சில மாநில ஆளுநர்களும் அதே வகையில் அதிகார வரம்பு மீறலில் ஈடுபடுகின்றனர். இந்த நிலை தேசிய ஒற்றுமைக்கு நல்லதல்ல என்று தி இந்துஸ்தான் டைம்ஸ் நாளேடு தனது தலையங்கத்தில் கருத்துப்பூர்வமான விமர்சனத்தை முன் வைத்துள்ளது.


The Hindustan Times
ESTABLISHED IN 1924
[ OUR TAKE ]
Sending the wrong signal
RN Ravi's actions cement perceptions that some governors are infringing on the state's domain. This isn't good for national unity
The high drama surrounding Tamil Nadu's governor RN Ravi's unprecedented move to dismiss a sitting minister, only to hold his earlier decision in abeyance hours later, sends the wrong signal and further stresses India's federal framework. It should have been avoided.
Raj Bhavan and the elected government in Tamil Nadu have been locked in an intensifying tussle over embattled minister V Senthil Balaji, who faces

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவியில் உள்ள அமைச்சரை தகுதி நீக்கம் செய்வதற்கு முன்னெப்போதும் இல்லாத நடவடிக்கையையை மேற்கொண்டு, தனது அந்த முடிவை சில மணி நேரங்களுக்குப் பிறகு நிறுத்தி வைத்த நாடகத்தனமான செயல்களின் விளைவு, இந்தியாவின் கூட்டாட்சி கட்டமைப்பை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கி இருக்கிறது. இது முற்றும் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டியதாகும்.

ஊழல் புகாரின் அடிப்படையில் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில்பாலாஜி தொடர்பாக ஆளுநர் மாளிகைக்கும், தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும் இடையே கடும் மோதல் நிலவி வருகிறது. அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு ஒதுக்கப்பட்ட இலாகாக்களை மற்ற உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்க ஆளுநருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதிய போது, ஆளுநர் ரவி அதைஏற்றுக் கொண்டார். ஆனால், குற்றம் சாட்டி, விசாரணக்கு உட்படுத்தப் பட்டு சிறை செல்ல வேண்டிய நிலையில் அந்த அமைச்சர் அமைச்சரவையில் தொடர்வது என்பது பற்றி தனது எதிர்ப்பை முன்பே தெரிவிக்கவில்லை. அதன் பின்னர், வியாழக்கிழமை மாலை நேரத்தில் முதல்வர் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்வதாகவும், நீதிக்கு முட்டுக்கட்டை இடுவதாகவும் குற்றம் சாட்டி, அமைச்சர் செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து தன்னிச்சையாக நீக்கம் செய்வதாக அறிவித்தார். இதனால் அரசியல் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அதன் பின்னர் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் தலையீட்டைத் தொடர்ந்து அன்று இரவே ஆளுநர் ரவி, முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு இரண்டாவது கடிதம் எழுதினார், அதில் அட்டர்னி ஜெனரலின் கருத்தைக் கேட்குமாறு அமித் ஷா அறிவுறுத்தியதாக தெரிவித்திருந்த, அந்த கடிதத்தில் “அட்டர்னி ஜெனரலின் கருத்தை கேட்டு அவரை அணுகினேன். அதன்படி அமைச்சர்செந்தில் பாலாஜியை பதவி நீக்கம் செய்யும் உத்தரவை நிறுத்தி வைக்கிறேன்” என்று எழுதியுள்ளார்.

அதிகாரத்தில் உள்ளவர்கள் மீதான விசாரணைகள் முழுமையானதாகவும், பாரபட்சமற்றதாகவும், விரைவாகவும் இருக்கும் என்று தான்ஒரு பத்திரிகை என்ற அளவில் நாங்கள் நம்புகிறோம். அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான குற்றச்சாட்டுகள் தீவிரமானவை, அவர் உண்மையிலேயே நீதிக்கு முட்டுக்கட்டை போடுகிறார் என்றால், அது சட்டப்படி முழுமையான அளவில் விசாரிக்கப்பட வேண்டும். அரசுப்பதவிகளில் ஒழுக்கம் மற்றும் நேர்மை ஆகியவை விரும்பத்தக்க பண்புகளாகும். ஆனால், ஆளுநர்கள் அரசியலமைப்பு விதிகளுக்கு மாறாக, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் அதிகாரங்களைக் குறைக்க முயற்சிப்பதன் மூலமோ அல்லது அரசியல் சாசனம் வரையறுத்துள்ளதை விட அதிக அதிகாரங்களை எடுத்துக் கொள்வதன் மூலமோ தன்னிச்சையான முடிவுகளை செயல்படுத்தக்கூடாது.

ஆளுநர் ரவி மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் துரதிர்ஷ்டவசமான அம்சம் என்னவென்றால், அவரது அடியொற்றி பாரதிய ஜனதா கட்சியின் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் ஆளுநர்கள், அந்த மாநில அரசின் அதிகாரத்தை மீறும் வகையில் செயல்படுகிறார்கள். ஆளுங்கட்சியுடன் மோதலைத் தூண்டிவிட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்ற செய்தி ஆளுநர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

எதிர்க்கட்சிகள் ஆளும் பல மாநிலங்கள் தற்போது ஆளுநர் மாளிகைக்கும், மாநில அரசுக்கும் இடையிலான மோதலால் கொந்தளித்துக் கொண்டுள்ளன. அவற்றில் கேரளா, தெலுங்கானா, மேற்கு வங்கம் மற்றும் பஞ்சாப் ஆகியவை தீவிர எடுத்துக்காட்டுகளாக உள்ளன. இந்த நிலையில், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் இதுபோன்ற சர்ச்சைக்கிடமான நிகழ்வுகள்ஒன்று கூட நடக்கவில்லை.

ஒவ்வொரு மாநிலத்திலும் நிகழ்கின்ற இதுபோன்ற மோதல் போக்குகள், இந்தியாவின் கூட்டாட்சி கட்டமைப்பிற்கு தீங்கையே விளைவிக்கும். ஏற்கனவே, மாநிலங்கள் நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அதிகாரப் பகிர்வு காரணமாக அழுத்தத்தில் உள்ளன. இந்த நிலையில், ஆளுநர்கள் மற்றும் மாநில அரசுகள் தங்களுக்கு மத்தியில் பரஸ்பர ஒத்துழைப்புடன், இந்திய அரசமைப்பு விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி தங்கள்கடமைகளைநிறைவேற்றுவதில் கவனம் செலுத்தவேண்டும். ஆளுநர்களுக்கு வரையறை செய்யப்பட்ட (உண்மையில் குறுகிய வரையறை) விருப்புரிமையும், பங்கும் கொண்ட கட்டமைப்பை நிறுவுவதில் அரசியலமைப்பின் சூத்திரதாரிகள் தெளிவாக செயல்பட்டுள்ளனர். ஜூன் 1949இல் அரசியல் நிர்ணய சபையில் பேசிய பி.ஆர்.அம்பேத்கர் கூறியதாவது:“அரசியல் சாசன சட்டத்தின் கீழ் ஆளுநருக்கு என்று தனிப்பட்ட முறையில் அவர் நிறைவேற்றக்கூடிய எவ்வித பணிகளும் இல்லை. அவருக்கு எந்தப் பணிகளும் இல்லை என்றாலும், அவர் செய்ய வேண்டிய சில கடமைகள் மட்டுமே உள்ளன. இந்த வேறுபாட்டை இந்த மாமன்றம் நினைவில் கொள்வது நல்லது என்று நான் நினைக்கிறேன்.”

ஆளுநர்களும் இதை நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தி இந்துஸ்தான் டைம்ஸ் நாளேடு தனது விமர்சனத்தை முன் வைத்துள்ளது.

முதல்வரை புறக்கணித்து செயல்பட்ட விதம் தவறானது

# அமைச்சர் பதவி நீக்க விவகாரத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி அத்துமீறல்

## ‘தி டிரிபியூன்’ நாளேட்டின் தலையங்கத்தில் கண்டனம்

ஆளுநர் மாளிகையின் தன்னிச்சையான முடிவுகள் காரணமாக வியாழக்கிழமை நடந்த நிகழ்வுகள் மீண்டும் புதிய முரண்களை உருவாக்கியுள்ளன. முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ஆலோசிக்காமல் அமைச்சர் செந்தில் பாலாஜியை தமிழ்நாடு அமைச்சரவையில் இருந்து ஆளுநர் ஆர்.என். ரவி அதிரடியாக நீக்கியுள்ளார். மத்திய உள்துறை அமைச்சகத்தின் தலையீட்டிற்குப் பிறகு தான் ஆளுநர் அந்த உத்தரவை நிறுத்தி வைத்து, பின்னர் அதைத் திரும்பப் பெற்றுள்ளார். இச்செயல் அரசியலமைப்பிற்கு முரணானது மட்டுமல்ல, முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அர சாங்கத்தின் அதிகாரத்தை குறைவான மதிப்பீட்டிற்கு உட்படுத்தும் ஒரு முயற்சியுமாகும்.


The Tribune
ESTABLISHED IN 1881
Governor's overreach
Wrong to bypass CM on minister's dismissal
GUBERNATORIAL overreach hit a new low on Thursday when Tamil Nadu Governor RN Ravi dismissed minister V Senthil Balaji from the state Cabinet without consulting Chief Minister MK Stalin. It was only after the Union Home Ministry's intervention that the Raj Bhavan placed the order in abeyance and later withdrew it. The Centre promptly stepped in to stall a move that was not only unconstitutional but also apparently an attempt to undermine the authority of a duly elected state government.
Balaji, who was arrested recently by the Enforcement Directorate in a cash-for-jobs scam case, is no doubt a tainted minister. The Raj Bhavan was not off the mark when it observed, "There are reasonable appre-

அதைத் தடுக்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கையும் எடுத்தது. பணி பெற்றுத் தருவதாக பணம் பெற்ற வழக்கில் சமீபத்தில் அமலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜி மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. அவர் அமைச்சரவையில் நீடிப்பதன் காரணமாக, நியாயமான விசா ரணை உள்ளிட்ட நியாயமான சட்ட நடைமுறைகள் மோசமாக பாதிக்கும் என்ற நியாயமான அச்சம் உள்ளதாக ஆளுநர் மாளிகை விளக்கம் அளித்துள்ளது. ஆனால், இந்த முக்கியமான தகுதியிழப்பு செய்யப்பட்ட பிரச்சினையில் தமிழ்நாடு முதல்வரை ஆளுநர் புறக்கணித்தது தவறான செயலாகும். இது தமிழ்நாட்டில் நடந்து வரும் உயர்மட்ட மோதலின் மற்றொரு வெளிப்பாடாக உள்ளது.

கடந்த ஜனவரி மாதம் சட்டசபை கூட்டத்தொடரின் போது ஆளுநர் தனது வழக்கமான உரையை வாசிக்கும் போது, அரசு அங்கீகரித்த உரையின் சில பகுதிகளை அவர் புறக்கணித்ததை அடுத்து, ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஜனாதிபதி திரவுபதி முர்முவிடம் அது குறித்த மனுவை அளித்தது. அத்துடன், தமிழ்நாடு அரசு நிறைவேற்றும் முக்கியமான மசோதாக்களுக்கு ஒப்புதலளிக்காமல் அவற்றை கிடப்பில் போட்டு வைத்திருப்பதாகவும் தமிழ்நாடு தொடர்ந்து அவர்மீது குற்றம் சாட்டி வருகிறது.

இது போன்ற மோதல் போக்குகள் சம்பந்தப்பட்ட மாநிலங்களில் நிர்வாக ரீதியான பாதிப்புகளையே ஏற்படுத்தும். அப்படிப்பட நிலை பஞ்சாப், கேரளா மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்களில் சமீப காலமாக இருந்து வருகிறது. மத்தியில் ஆளும் கட்சி, தான் ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் அரசியல் பிரச்சினைகளில் தலையிட்டு தீர்வு காணும் வகையில் ஆளுநர்களை பயன்படுத்துகிறது என்ற எண்ணம் இப்போது வலுத்துள்ளது.

இத்தகைய ஒருதலைப்பட்சமான நிலை என்பது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது. ஆளுநர் மற்றும் மாநில முதல்வரின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் அரசியலமைப்பு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், இருவரும் பொது நலனுக்காக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். தங்கள் அதிகாரத்தை மீறி நடப்பதை ஆளுநர்களும் தவிர்க்க வேண்டும்.

இவ்வாறு தி டிரிபியூன் நாளேடு தனது தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.



கடலூர் கிழக்கு மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியம்,விருப்பாட்சி, கேசவநாராயணபுரம், பார்வதிபுரம், அயன்குறிஞ்சிப்பாடி ஆகிய பகுதிகளில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் தலா ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில், புதியதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடைகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்து, பொதுமக்களுக்கு பொதுவிநியோகப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் அ.அருண்தம்புராஜ், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி, திட்ட இயக்குநர் வி.மதுபாலன், மாவட்ட கூட்டுறவு இணைப்பதிவாளர் நந்தகுமார், மாவட்ட கல்விக்குழு தலைவர் வி.சிவக்குமார், ஒன்றிய கழக செயலாளர் ஆர்.நாராயணசாமி, பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், எஸ்.சிவக்குமார், தன.தமிழ்செல்வன், உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள், பயனாளிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கடந்த சில ஆண்டுகளாக

# அரசியலமைப்பு வரம்புகளை மீறி ஆர்.என்.ரவி செயல்படுகிறார்!

## ‘தெலங்கானா டுடே’ நாளேட்டின் தலையங்கத்தில் விமர்சனம்!

ஆளுநர்களின் பாரபட்சமான அணுகுமுறை கடந்த சில ஆண்டுகளாக அனைத்து தரப்பினரின் விமர்சனத்திற்கும் உள்ளாகி வருவதாக தெலங்கானா நாளேட்டின் தலையங்கத்தில் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது.

அப்பட்டமான, பாரபட்சமான அணுகுமுறை காரணமாக கடந்த சில ஆண்டுகளாக ஆளுநர்களின் பொறுப்பு என்ன என்பது விமர்சனத்திற்கு உள்ளாகி வருகிறது. பா.ஜ.க அல்லாத மாநில அரசாங்கங்களைக் குறிவைக்கும் அரசியல் கருவிகளாக, அரசியலமைப்பு நிலைப்பாடுகள் மாற்றப்பட்டுள்ளன. “டீம் இந்தியா” என்ற ஒன்றிய அரசின் தேசிய ஜனநாயகக் கூட்டணி அத்தகைய தொடர்ச்சியான நிகழ்வுகள் மூலம் தமிழ்நாடு அரசில், ஆளுநர் பதவியை தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்ற அச்சத்தை வலுப்படுத்துகின்றன.


Telangana Today
Overstepping constitutional limits
The role of Governors has increasingly come under scanner in the last few years because of their blatantly partisan approach. The NDA government's oft-repeated claim of 'Team India' spirit flies in its face as the constitutional positions have been turned into political tools to target non-BJP governments. The latest developments in Tamil Nadu strengthen the fears over the gross misuse of gubernatorial positions. Governor RN Ravi's unprecedented action to dismiss Minister V Senthil Balaji, citing criminal proceedings against him in cases of corruption and money laundering, defies all logic and constitutional procedures. The out-

அமைச்சர் செந்தில்பாலாஜி மீது ஊழல், பணமோசடி வழக்குகளில் குற்றம் சுமத்தி கிரிமினல் நடவடிக்கை எடுத்ததை காரணம் காட்டி அவரை பதவி நீக்கம் செய்த ஆளுநர் ஆர்.என். ரவியின் அதிரடி நடவடிக்கை விதிகளையும், அரசியல் சாசன நடைமுறைகளையும் முற்றிலும் மீறிய செயலாகும். அப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கை என்பது அதிகார துஷ்பிரயோகத்தையே பிரதிபலிக்கிறது. அதன் விளைவாக ஆளுநர் மாளிகைக்கும், தி.மு.கழக அரசுக்கும் இடையிலான மோதல் போக்கு வலுத்துள்ளது.

தலைமை வழக்குரைஞரிடம் சட்ட ஆலோசனை பெறுவதற்காக ஆளுநர் தனது உத்தரவை கிடப்பில் போட்டு வைத்துள்ளார். எந்தவொரு அமைச்சரையும் பதவி நீக்கம் செய்ய ஆளுநர்களை அரசியலமைப்பு சட்டத்தின் விதிமுறைகள் அனுமதிக்காத நிலையில் ஆளுநர் ரவியின் செயலுக்கு அனைத்து தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகள் மற்றும் அரசியல் சாசன வல்லுநர்களின் கூற்றுப்படி மாநில அமைச்சரவையின் ஆலோசனை அல்லது வழிகாட்டுதல் இல்லாமல் ஆளுநர்கள் இதுபோன்ற தன்னிச்சையான நடவடிக்கைகளை எடுக்க முடியாது. அந்த வகையில், கடந்த 2013ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் படி அமைச்சரவையின் முடிவிற்கு உட்படாமல் தன்னிச்சையாக ஆளுநர்கள் செயல்பட்டால் அது ஜனநாயகத்திற்கே ஆபத்தாக அமைந்து விடும் என்ற கருத்தை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அமைச்சர் செந்தில் பாலாஜியை இலாகா இல்லாத அமைச்சராக தக்க வைத்துக் கொள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் முடிவு செய்த நிலையில், ஆளுநரின் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் 14ம் தேதி வேலை வாங்கித் தருவதாக பணம் பெற்ற வழக்கில் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜியின் வழக்கை அமலாக்கத் துறை விசாரிக்கும் நிலையில், அவர் நீதிமன்றக் காவலில் உள்ளார்.

இது போன்ற நிலை, கடந்த ஆண்டு கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான், முதல்வர் பினராயி விஜயனுக்கு எழுதிய கடிதத்தில், நிதியமைச்சர் கே.என்.பாலகோபால் மீது “அரசியலமைப்பு ரீதியாக பொருத்தமான நடவடிக்கையை” எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். தெலங்கானா, வங்காளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலும் ஆளுநர்கள் தங்கள் அரசியல் சாசன வரம்புகளை மீறி அரசியலில் ஈடுபடும் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன. தமிழ்நாட்டை போலவே தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜனும் ஒத்துழைப்பற்ற தன்னிச்சையான போக்கைக் கடைப்பிடித்து, சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டட்ட மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்க மறுத்து அரசியலமைப்பு நடைமுறைகளுக்கு முட்டுக்கட்டை போட முயற்சிக்கிறார்.

ஆளுநர்கள் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கவோ, ஒப்புதலை நிறுத்தி வைக்கவோ அல்லது ஒதுக்கவோ, அல்லது குடியரசு தலைவரின் ஒப்புதலுக்காகவோ அனுப்பி வைப்பதில் அரசியல் சாசனம் ஒரு காலவரையறையை நிர்ணயிக்கவில்லை என்றாலும், அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகள் மோசமாக பாதிக்கப்படாத வகையில், மசோதாக்களுக்கு விரைவாக ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும் என்று மாண்புகளும், மரபுகளும் கோருகின்றன. அரசியலமைப்பின் 163வது பிரிவு ஆளுநரின் விருப்புரிமை அதிகாரத்தின் ஆதாரமாக உள்ளது.

ஒன்றிய அரசு ஆளுநர்களை நியமிக்கும் போது அரசமைப்பு பிரிவு 163ன் படி அவர்களுடன் இணைந்து மாநிலங்களின் விவகாரங்களில் அதுவும் தலையிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்கிறது. இது போன்ற நிலையில் ஆளுநர் அலுவலகம் அரசியல் கருவியாகப் பயன்படுத்தப்படுவதை, அரசமைப்பு ரீதியாக பொருத்தமானதா என்பது பற்றி ஒரு தேசிய அளவிலான பரந்த விவாதத்தை மேற்கொள்ள வேண்டிய நேரம் இது.

இவ்வாறு, தெலங்கானா டுடே நாளேடு தனது தலையங்கத்தில்விமர்சித்துள்ளது.